

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | செப்டம்பர் 23, 2021 | புரட்சி 20 | முழக்கம் 30 | விலை: ரூ.3.00

## ஜாதி மத மறுப்பு திருமணங்கள் – மருத்துவ முகாம்கள் – கொடி ஏற்றல்

# களை கட்டிய பெரியார் பிறந்த நாள் விழாக்கள்

தமிழக அரசு, பெரியார் பிறந்த நாளை‘சமூக நீதி’ நாளாக அறிவித்ததைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுதும் பெரியார் பிறந்த நாள், மாபெரும் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. அரசு அலுவலகங்களில் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. தி.மு.க. தலைமை நிலையமான அறிவாலயத்தில் முதல்வர் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னணியினர் உறுதிமொழி ஏற்றனர். தலைமைச் செயலகத்தில் முதல்வர் உறுதிமொழி படிக்க அரசுத் துறை அதிகாரிகள் உறுதிமொழி ஏற்றனர்.

தமிழகம் முழுதும் அரசு அலுவலகங்களில் உறுதிமொழிகள் ஏற்கப்பட்டன. பள்ளி மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். பல்வேறு கட்சிகள், இயக்கங்கள் சார்பில் பெரியார் சிலைகளுக்கும் படங்களுக்கும் மாலைகள் அணிவித்து உறுதிமொழிகள் ஏற்கப்பட்டன.

திரவிடர் விடுதலைக் கழக சார்பில், சென்னை, மேட்டூர், ஈரோடு, கோபி, மயிலாடு துறை, திருச்செங்கோடு, இராசிபுரம், பொள்ளாச்சி, சேலம் நகரம், நங்கவள்ளி, திருச்சி, கள்ளக் குறிச்சி, வேலூர், மடத்துக்குளம், மேட்டுப் பாளையம், திருப்பூர், கிருஷ்ணகிரி, சென்னியம் பாளையம், அரசூர், பவானி, பண்டஅள்ளி, ஏற்காடு, தூத்துக்குடி, மதுரை உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் பெரியார் சிலைகளுக்கும் படங்களுக்கும் மாலைகள் அணிவிக்கப்பட்டு உறுதிமொழிகள் ஏற்கப்பட்டன.

### பெரியார் சிலையின் கீழ் சென்னையில் மத மறுப்புத் திருமணம்.

17.09.2021 அன்று இராயப்பேட்டை வி.எம்.தெரு பெரியார் படிப்பகத்தில் உள்ள சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு நிகழ்வு தொடங்கப்பட்டது. பின் கழகத் தோழர் இலக்கியா உறுதிமொழி கூற தோழர்கள் உறுதிமொழி எடுத்தனர். நிகழ்வில் தோழர்களோடு சுந்தரவள்ளி, சிற்பிராஜன், தி.மு.க.



பொறுப்பாளர்கள் ஆர்.என்.துரை, கா.வே.செழியன் கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து, மதுரை தெற்கு பகுதியைச் சேர்ந்த முகமது ரஃபி - விஜயராணி ஆகியோரின் மகள் மு.சுபைதா நைனா, இராமகிருஷ்ணன் - விஜய லட்சுமி இணையரின் மகன் ரா.வி. சூரியநாராயணன் இணையரின் மத மறுப்பு சுயமரியாதை திரு மணத்தை பெரியார் சிலைக்கு கீழே அமைக்கப்பட்ட மேடையில் கழகப் பொதுச செயலாளர் விடுதலை இராசேந்திரன் நடத்தி வைத்தார்.

தொடர்ந்து தியாகராயர் நகர் பெரியார் சிலை, கிண்டி கத்திப்பாரா அருகில் உள்ள பெரியார் சிலை, ஆகிய இடங்களில் மாலை அணிவிக்கப்பட்டு, கழகத் தோழர் இரம்யா உறுதிமொழி கூற தோழர்கள் உறுதி மொழி எடுத்தனர். தியாகராய நகரில், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் ஏற்பாட்டில் காலை உணவு வழங்கப்பட்டது.

**மருத்துவ முகாம்:** மயிலாப்பூர் பகுதி கழக சார்பாக, சமூக நீதி நாளை ஒட்டி மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. காலை 10:30 மணியளவில், ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், மருத்துவ முகாமை தொடங்கி வைத்தார். திருமண மண்டபம் ஒன்றில் கழகம் ஏற்பாடு செய்த முகாமில் மாநகராட்சி மருத்துவர்களால் பொது மக்களுக்கு கொரானா தடுப்பூசி போடப் பட்டதோடு மருத்துவ சிகிச்சைகளும் இலவசமாக அளிக்கப்பட்டன.

முன்னதாக மயிலாப்பூர் கழகப் படிப்பகம் அருகில் அமைக்கப்பட்டிருந்த பெரியார் உருவப்படத்திற்கு மருத்துவர் எழிலன் மற்றும் மயிலை சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, கழக தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் ஆகியோர் மாலை அணிவித்தனர். சமூக நீதி நாள் உறுதிமொழியும் எடுக்கப்பட்டது.

### திருப்பூரில் பெரியார் பிறந்த நாள் விழா – ஊர்வலம் – கழகக் கொடியேற்றம் – தெருமுனை பரப்புரை

திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக பெரியாரின் பிறந்த நாள் விழா 19.09.2021 ஞாயிறு காலை 11 மணி அளவில் திருப்பூர் ரயில் நிலையம் அருகே உள்ள பெரியார் சிலையின் முன்பிருந்து ஊர்வலமாகத் துவங்கியது.

### கழகம் எடுத்த உறுதி மொழி

## “சமூகநீதி தமிழ்நாடு” அமைக்க இளைஞர்களை அணி திரட்டுவோம்

பெரியார் பிறந்த நாளையொட்டி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் பெரியார் சிலைகள் முன் எடுத்த உறுதி மொழி.

பெரியார் பிறந்த நாளை சமூகநீதி நாளாக அறிவித்து அமையப் போகும் எதிர்கால தமிழ்நாட்டின் இலக்கினை அடையாளம் காட்டிய தமிழக முதல் வருக்கும், தமிழக அரசுக்கும் நன்றி செலுத்துகிறோம்.

“ஜாதி, மத அடையாளங்களைக் காட்டி பாகுபாடு காட்டுவது, பெண்களின் உரிமைகளை மறுத்து அடக்கி ஒடுக்குவது, அறிவியலுக்கு எதிரான சடங்கு களை, நம்பிக்கைகளை பண்பாட்டு பெருமைகளாகப் பேசி வளர்ச்சிக்கான சிந்தனைகளை முடக்குவது, ஒன்றியத்தை ஒற்றை ஆட்சியாக மாற்றி அமைப்ப தற்கு தமிழ்நாட்டின் கல்வி, பொருளாதாரம், விவசா யம், சுற்றுச்சூழல், அரசியல் உரிமைகளைப் பறிப்பது, சமஸ்கிருத பண்பாட்டை தேசிய பண்பாடாக மாற்றுவது” உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் சமூக நீதியை குழி தோண்டி புதைப்பதே ஆகும்.

இம்முயற்சிகளை முறியடிக்க பெண்கள் ஆண்கள் அடங்கிய இளைய சமூகத்தை அணிதிரட்டி சமூக நீதியை நோக்கி முன்னேறிச் செல்ல உறுதியேற் கிறோம்.

இந்த பணிகளுக்காக நான் சார்ந்துள்ள இயக்கத் திற்கு மேலும் கூடுதலாக எனது ஆற்றலையும், பங்களிப்பையும் வழங்குவதோடு எதிர்கால தமிழ்நாடு சமூகநீதி நாடு என்று உலகுக்கு காட்ட உறுதியேற் போம்.

வாழ்க பெரியார். வெல்லட்டும் சமூக நீதி.

இந்நிகழ்விற்கு கழகப் பொருளாளர் துரைசாமி தலைமை தாங்கினார் திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு முன்னிலை வகித்தார்.

முதல் நிகழ்வாகத் தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப் பட்டன. தொடர்ந்து கழகத் தோழர்கள் மற்றும் பொறுப் பாளர்கள் ஊர்வலமாகத் திருப்பூரின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று கழகக் கொடிகளை ஏற்றியும் தெருமுனைக் கொள்கைப் பரப்புரையையும் மேற் கொண்டனர்.

மதிய உணவாக மாவட்டத் தலைவர் முகில் ராசு அவர்கள் இல்லத்தில் தோழர்களுக்கு மாட்டுக்கறி உணவு வழங்கப்பட்டது.

இரவு வரை நீடித்த இந்தப் பரப்புரைப் பயணத்தில் பெரியாரின் பிறந்த நாள் நிகழ்வாக பொதுமக்களுக்கு பெரியார் கொள்கைகளையும், தற்போது மிகச் சிறப்பாக நடைபெற்று வரும் திமுக அரசு திராவிட இயக்கக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் சாதனைகளையும் விரிவாக விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

### கழக முயற்சி வெற்றி: பெரியார் சிலை கூண்டு நீக்கம்

சென்னை கத்திப்பாரா அருகிலுள்ள பெரியார் சிலைக்கு போடப்பட்டிருந்த கூண்டு அகற்றப் பட்டது. கூண்டை அகற்றக் கோரி கடந்த ஆண்டு அக்.7 ஆம் தேதி சென்னை மாவட்டக் கழக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இப்போது பெரியார் பிறந்த நாள் விழாவையொட்டி காவல்துறை அதிகாரிகளை சந்தித்து கூண்டினை அகற்ற கழகத் தோழர்கள் வலியுறுத்தினர்.

கழகத் தோழர்கள் குகானந்தன், வழக்கறிஞர் அருண், முன்முயற்சி எடுத்து கழகத் தோழர் களுடன் காவல்துறை அதிகாரிகளிடம் எடுத்துக் கூறினர். காவல்துறை ஒப்புதலுக்குப் பிறகு கழகத் தோழர்கள் கூண்டினை அகற்றினர்.

கூண்டு நீக்கப்பட்ட பெரியார் சிலைக்கு உணர்ச்சி முழக்கங்களுடன் தோழர்கள் மாலை அணிவித்து உறுதி ஏற்றனர்.

கொடியேற்றம் மற்றும் தெருமுனை பரப்புரை மேற்கொள்ளப்பட்ட இடங்கள் :

பெரியார் சிலை, இராயபுரம், மாஸ்கோ நகர், கண்ணகி நகர், ரங்கநாதபுரம், பெரியார் காலனி, அனுப்பர்பாளையம், அம்மாபாளையம், ஆத்துப் பாளையம், சந்தை பேட்டை, கொளத்துப் பாளையம், வீரபாண்டி.

தெருமுனை பரப்புரைகள் நடைபெற்ற இடங் களில் திமுக மதிமுக மற்றும் தோழமை அமைப்பைச் சேர்ந்த தோழர்கள் பரப்புரைக்கு வரவேற்பு தெரிவித்து வாழ்த்துக்களைக் கூறிப் பேசினார்கள்.

நிகழ்வில் அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, கழகச் சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன், மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, மடத்துக்குளம் சிவானந்தம், பொள்ளாச்சி சபரி மற்றும் தனபால், விஜய், மதன், சுருளி, ஜெசி, வீரலட்சுமி, சங்கவி, கோமதி, ஸ்ரீஜா, சரசுவதி, ராமசாமி, அய்யப்பன், ராஜசிங்கம், அகிலன், மாதவன், மாரிமுத்து, முத்துலட்சுமி, வசந்தி, ஷாலினி, முத்து, மூர்த்தி, கருணாநிதி, தனகோபால், கலைவாணி, பாலசுப்பிரமணி, சூர்யா, சந்திரா, பரந்தாமன், விஷ்ணு, அஸ்வின், மாணவர் கழகத்தை சேர்ந்த தோழர்கள் தேன்மொழி, பிரசாந்த் சந்தோஷ், கனல்மதி, ஈழமாறன், முத்தமிழ், சிபிச்செல்வன், கார்த்திகா, ஆகாஷ், பெரியார் பிஞ்சுகள் யாழினி, யாழிசை, அமுதினி, ஆதன், லவ்லிரியா, வெற்றி மாறன், வெற்றி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மேட்டூரில் ஜாதி மறுப்பு திருமணம்

17.9.2021 காலை 10.00 மணியளவில் சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ் தலைமையில் குஞ்சாண்டியூர் சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து உறுதி மொழி எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பெரியார் சிலை அருகிலேயே மேட்டூர் RS பகுதி சுசீந்திரன் - கிளாரா மேரி ஆகியோரது சுயமரியாதைத் திருமணம் தலைமை செயற்குழு உறுப்பினர் அ.சக்திவேல் உறுதிமொழி கூற சிறப்புடன் நடைபெற்றது. தோழர்களுக்கு கேக் வெட்டி கொடுக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து RS பகுதி தோழர்கள் கொடியேற்று நிகழ்ச்சியை தொடங்கினர். RC பிளாண்ட் பகுதி-ராஜசேகர், ராமன் நகர் - சந்திர மூர்த்தி, சாம்பள்ளி - நாகராஜ், RS பகுதி - செயலாளர் விவேக், NSK நகர் - கவிபுரம் குமார், தேங்கல் வாரை -

(4ஆம் பக்கம்)

**தலையங்கம்**

## ‘இந்துத்துவ’ அரசியலும் பிற்படுத்தப்பட்டோரும்!

பா.ஜ.க. தன்னை பிற்படுத்தப்பட்டோர் நலன் காக்கும் அமைப்பாக அடையாளம் காட்டத் தொடங்கியிருப்பது வாக்கு வங்கிக்குக் குறி வைக்கும் ஒரு சதி வலை என்பதை ஒடுக்கப்பட்ட மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த செப். 18, 19 தேதிகளில் பா.ஜ.க.வின் பிற்படுத்தப்பட்டோர் அணி உ.பி. மாநிலம் அயோத்தியில் மாநாடு ஒன்றை நடத்தியிருக்கிறது. இது குறித்து ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ வெளியிட்டுள்ள (செப்.18, 2021) ஒரு ஆய்வில், “அதிக வாக்கு சதவீதத்தைக் கொண்ட பிற்படுத்தப்பட்டோர் பிரிவை ‘இந்துத்துவா’ அரசியலுக்கு நெருக்கமாகக் கொண்டு வந்து அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் தேர்தலுக்கு வாக்கு வங்கியாகப் பயன்படுத்துவதே இதன் நோக்கம்” என்று எழுதியிருக்கிறது. இந்தக் கூட்டத்துக்கு அயோத்தியைத் தேர்வு செய்தது ஏன் என்பதற்கு ஆர்.எஸ்.எஸ். தரப்பில் கூறப்படும் விளக்கத்தையும் அந்த ஏடு சுட்டிக்காட்டியிருக்கிறது. பகவான் ராமனுடன் பிற்படுத்தப்பட்டோர் உணர்வுபூர்வமாக நீண்டகாலமாக நெருக்கமாக இருப்பதால் அந்த மத உணர்வைப் பயன்படுத்திக் கொள்ளவே அயோத்தியைத் தேர்வு செய்ததாக கூறியிருக்கிறார்கள். பா.ஜ.க.வின் பிற்படுத்தப்பட்டோர் அணி தலைவரான நரேந்திர கஷ்யாப் அளித்துள்ள பேட்டியில், உ.பி. அமைச்சரவை யிலும் ஒன்றிய அமைச்சரவையிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்குவோம் என்று பேட்டி அளித்திருக்கிறார்.

இந்துத்துவா அரசியல் பிடியில் சிக்கியுள்ள ‘பிற்படுத்தப்பட்டோருக்கும்’ சமூக நீதி கொள்கையோடு பிணைத்துக் கொண்டிருக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கும் இடையே உள்ள முரண்பாடுகளை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

பா.ஜ.க. அமைச்சரவையில் பிற்படுத்தப்பட்டோர் அல்லது பட்டியல் இனப் பிரிவினர் எவ்வளவு அதிக எண்ணிக்கையில் இருந்தாலும் அவர்கள் மதவாதத் தலைமையின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டவர்கள்தான். சமூக நீதிக்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல; பா.ஜ.க.வின் ‘இந்துத்துவ’ பார்ப்பனியத் தலைமை. ‘நீட்’ தேர்வைத் திணிப்பதையும் உயர்ஜாதி ஏழைகளுக்கு தனியாக பத்து சதவீத இடஒதுக்கீட்டைக் கொண்டு வருவதையும் உயர்கல்வி நிறுவனங்களில் ஒடுக்கப்பட்டோருக்கு கல்வி – பேராசிரியர் நியமனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு உரிய பங்கினை வழங்க மறுப்பதையும் பா.ஜ.க.வின் ‘இந்துத்துவ’ பிற்படுத்தப்பட்டோரால் எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாது. தலைமையின் முடிவுகளைப் பணிந்து ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். மட்டுமின்றி, ‘நீட்’ போன்ற சமூக அநீதிகளை மக்கள் மன்றத்தில் நியாயப்படுத்திப் பேசியாக வேண்டும்.

‘இந்துத்துவா’ அரசியலே – சமூகநீதிக்கு எதிரானதுதான்; பல்வேறு சமயக் குழுக்களாகப் பிரிந்து கிடந்தவர்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வரும் நோக்கத்தோடு சாவர்க்கர் முன் வைத்த கோட்பாடு ‘இந்துத்துவம்’. அதன் நோக்கம், இஸ்லாம் என்ற எதிரியைக் கட்டமைத்து அதற்கு மாற்றாக, ‘மத அரசியலை’ முன்னெடுப்பதே தவிர, ‘இந்து’ எனும் ‘வேத மதத்தால்’ புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு சமத்துவத்தையும் சமூக நீதியையும் வழங்குவது அல்ல. அந்த ‘இந்துத்துவ’ அரசியலை நிலைநாட்ட அவர்களுக்கு அதிகாரம் தேவைப்படுகிறது.

சமூக நீதியை விலக்கி மதத்தை முன்னிறுத்துவதே இந்துத்துவத்தின் முதன்மையான நோக்கம்.

தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் தலைவராகவும் முன்னணி பொறுப்பாளர்களாகவும் உள்ள ‘இந்துத்துவ’ பிற்படுத்தப்பட்டோர் தான் ‘நீட்’ தேர்வு வேண்டும் என்கிறார்கள். அதற்காக தி.மு.க. ஆட்சி நியமித்த ஏ.கே. ராஜன் குழுவைக் கலைக்க வேண்டும் என்று நீதிமன்றம் போகிறார்கள்.

பிரதமர் மோடி, பிற்படுத்தப்பட்டவராக அடையாளம் காட்டப்படுகிறார். ஆனால் அவரது அதிகாரம் நிறைந்த பிரதமர் அலுவலகத்தில் ஒரு பிற்படுத்தப்பட்ட, பட்டியல் இனப் பிரிவு அதிகாரிகூட இல்லை என்று தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் தகவல்கள் கூறுகின்றன.

மருத்துவ உயர் பட்டப்படிப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை வழங்க ஒன்றிய ஆட்சி மறுத்த போது ‘பா.ஜ.க.’ பிற்படுத்தப்பட்டோர் ஒன்றிய ஆட்சியை எதிர்த்தார்களா? இல்லை. சமூகநீதி பேசும் திராவிடர் இயக்கமான தி.மு.க. தான் நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி அனைத்து மாநிலத்திலுள்ள “இந்துத்துவ” பிற்படுத்தப்பட்டோருக்கும் சமூக நீதி பிற்படுத்தப்பட்டோருக்கும் உரிமைகளை மீட்டுத் தந்தது.

மேலும் பிற்படுத்தப்பட்டோராக அடையாளப்படுத்தப்படும் ஜாதிக் குழுக்களை ஜாதி அமைப்புக்குள்ளே தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே ‘இந்துத்துவா’வின் நோக்கம். இந்து மத வர்ணாஸ்ரமம் வழியாக உருவான ஜாதியக் கட்டமைப்பு ‘இந்துத்துவ’ அரசியலுக்கு தேவைப்படுகிறது.

ஜாதியை இந்துத்துவ அரசியல் ஏற்கவில்லை என்று இதுவரை பா.ஜ.க.வோ ‘சங்’பரிவாரங்களோ அறிவித்ததாக வரலாறே இல்லை. மாறாக அதைக் கட்டிக் காப்பாற்றவே துடிக்கிறார்கள்.

‘சமூக நீதி’க்கான நாளாக பெரியார் பிறந்த நாளை தமிழக அரசு அறிவித்தபோது அதை எதிர்த்து அதே நாளில் குஜராத் மோடிக்கு தமிழ்நாட்டில் விழா எடுத்ததுதான் இந்துத்துவ – பிற்படுத்தப்பட்டோர் தலைமையிலான தமிழக பா.ஜ.க.

ஆக, பிற்படுத்தப்பட்டோர் பற்றிப் பேசுவதாலோ அவர்களை அணி திரட்டுவதாலோ அவர்களை அமைச்சர்களாக்குவதாலோ சமூக நீதியை பா.ஜ.க. ஆதரிக்கிறது என்று கருதிவிடக் கூடாது; மாறாக பார்ப்பனியத்துக்கு வலிமை சேர்க்கவும் சமூக நீதியைக் குலைக்கவும் இந்துத்துவ அரசியலுக்கான கருவிகளாகப் பயன்படுத்துவதுமே அவர்களின் நோக்கம்.

# நூற்றாண்டைக் கடக்கும் ‘வகுப்புவாரி’ ஆணை “மானுட சுதந்திர சாசனம்”

***1921 செம்டம்பர் 16இல் முதல் வகுப்புவாரி ஆணை, நீதிக்கட்சியால் பிறப்பிக்கப்பட்டு, 2021 செப். 16 – நூற்றாண்டு நிறைவடைகிறது. அதன் சுருக்கமான வரலாறு:***

1916ல் டாக்டர் சி. நடேசன், டி.எம். நாயர், தியாகராய செட்டி ஆகியோரால் உருவாக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (South Indian Liberal Federation, சவுத் இந்தியன் லிபரல் ஃபெடரேசன்) கல்வியிலும் வேலை வாய்ப்புகளிலும் பிராமணரல்லா தோரின் பிரதிநிதித்துவம் குறித்து தொடர்ந்து பேசி வந்தது.

1916 நவம்பரில் வெளியிடப்பட்ட பார்ப்பனரல்லாதோர் கொள்கை அறிக்கை, இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டது. பெரும்பாலான வேலை வாய்ப்புகள் “பார்ப்பனர்”களுக்கே செல்வதாக இந்த அறிக்கை கூறியது. எல்லா சமூகத்தினருக்கும் சம வாய்ப்புகள் கிடைக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டது.

இந்த நிலையில் இந்தியாவில் மாண்டெகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் அமலுக்கு வந்தன. இதையடுத்து மாகாண சட்டமன்றங்களுக்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. இந்தத் தேர்தலில் போட்டியிட்ட நீதிக் கட்சி, தனது அறிக்கையிலேயே, எல்லோருக்கு மான சம வாய்ப்புகள் குறித்து குறிப்பிட்டது.

இந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற நீதிக் கட்சி, 1920 டிசம்பர் 17ஆம் தேதி சுப்பராயலு ரெட்டியார் தலைமையில் பதவியேற்றது. அடுத்த ஆண்டு ஜூலை 11ஆம் தேதி சுப்ப ராயலு ரெட்டியார் உயிரிழந்து விட்டார். இதற்கடுத்ததாக, பனகல் அரசர் ராமராய நிங்கர் முதலமைச்சராகப் பதவியேற்றார்.

இதற்குப் பிறகு, நீதிக் கட்சியின் முக்கியமான திட்டங்களை செயல்படுத்தும் பணிகள் துவங்கின. இந்தத் தருணத்தில், மெட்ராஸ் மாகாண சட்டப்பேரவையில் பிராமணரல்லாதார் யார் என்பது குறித்து விவாதம் நடைபெற்றது. பெரும் விவாதத்திற்குப் பிறகு, “பார்ப்பனரல்லாதார் என்றால் முகமதியர், இந்திய கிறிஸ்தவர், பார்ப்பனரல்லாத இந்துக்கள், ஜைனர்கள், பார்சிகள், ஆங்கிலோ இந்தியர் ஆகிய மற்றுமுள்ளோர் என்று பொருள்” என சி. நடேசனார் விளக்கமளித்தார்.

இந்த விளக்கமே வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை வெளியாவதற்கு அடிப்படையாக அமைந்தது. பார்ப்பனரல்லாதார் என்றால், இந்துக்கள் அல்லாத மற்றவர்களும் அடங்குவர் என்பதையும் இந்தத் தீர்மானம் உறுதிப்படுத்தியது.

1921 ஆகஸ்ட் ஐந்தாம் தேதி சட்டப் பேரவையில் பேசிய ஓ. தணிகாசலம் செட்டியார் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். ஒரு அரசு அலுவலகத்தில் 100 ரூபாய் அளவுக்கு சம்பளம் வாங்கும் எல்லா அதிகாரிகள் மட்டத்திலும் 66 சதவீதம் அளவுக்கு பார்ப்பனரல்லாதார் இடம் பெறும்வரை, கிறிஸ்தவர்கள், முகமதியர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட பார்ப்பனரல்லாத வகுப்பினருக்கு பணிகளில் முன்னுரிமை தரவேண்டும். பார்ப்பனர்களை விட, அவர்கள் சற்று தகுதிக்குறைவாக இருந்தாலும் இதைச் செய்ய வேண்டும். 100 ரூபாய்க்கு கீழே ஊதியம் பெறுபவர்களில் 77 சதவீதம் பார்ப்பனரல்லாதவர்களாக இருக்கும் நிலை ஏற்பட வேண்டும். 7 ஆண்டுகளில் இதை எட்ட வேண்டும் என அந்தத் தீர்மானம் கூறியது.

இந்தத் தீர்மானத்தை நடேச முதலியார் வழிமொழிந்தார். “பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால் வரி இல்லை” என்று முழங்கினார். அதே நாளில் மேலும் ஒரு தீர்மானத்தையும் தணிகாச்சலம் செட்டியார் கொண்டு வந்தார். அதன்படி, தலைமைச் செயலகத்தில் ஐ.சி.எஸ். பிரிவு அதிகாரிகளைத் தவிர, பிற பிரிவுகளுக்கு பார்ப்பனரல்லாதவர்களையே நியமிக்க வேண்டும் என அந்தத் தீர்மானம் கூறியது.

அவையிலிருந்த பி. சிவாராவ், எல்.ஏ. கோவிந்தராகவ ஐயர் போன்ற பார்ப்பன உறுப்பினர்கள் இதனைக் கடுமையாக எதிர்த்தனர். “உலகமே நம்மைப் பார்த்துச் சிரிக்கும்” என்று குறிப்பிட்டனர். ஆனால், ஆர்.கே. சண்முகம் செட்டியார் இதனை ஆதரித்தார். “இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் நாட்டிற்கே விடுதலை அளித்த மனிதர்களாக எதிர்கால சந்ததி நம்மைக் கருதும்” என்றார். இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கம்யூனல் ஜி.ஓ. சொல்வதென்ன?

இதன் தொடர்ச்சியாகவே, Communal GO என்று ஆங்கிலத்தில் அழைக்கப்பட்ட வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கான அரசாணை பனகல் அரசர் தலைமையிலான அரசால் செப்டம்பர் 16, 1921இல் வெளியிடப்பட்டது. இந்த அரசாணையில் பின்வரும் வாசகங்கள் இடம்பெற்றிருந்தன:

“பார்ப்பனரல்லாதவர்கள் அரசு அலுவலகங்களில் பெற்றுள்ள இடங்களை அதிகரிக்க, பல்வேறு ஜாதியினருக்கும் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இடங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக வருவாய்த் துறையில் பிறப்பிக்கப்பட்ட நிலை ஆணை 128 (2)ல் தெரிவிக்கப்பட்டிருக்கும் வழிமுறைகளை அரசின் எல்லாத் துறைகளுக்கும், எல்லா மட்டங்களுக்கும் செயல்படுத்த வேண்டும். எல்லாத் துறைகளின் தலைவர்களும், பணி நியமனம் செய்யும் அதிகாரம் படைத்த அதிகாரிகளும் எதிர்காலத்தில் காலிப் பணியிடங்களை நிரப்பும் போது இந்த வழிமுறையைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

அரசு அலுவலகங்களில் வேலை வாய்ப்புகளை அளிக்கும்போது, 12 இடங் களாக அவற்றைத் தொகுத்து வேலை வாய்ப்புகளை அளிக்க வேண்டும். அதன்படி, 12 இடங்களில் 2 இடங்கள் பார்ப்பனர்களுக்கும் ஐந்து இடங்கள் பார்ப்பனரல்லாதவர்களுக்கும் இரண்டு இடங்கள் இஸ்லாமியர்களுக்கும் இரண்டு இடங்கள் கிறிஸ்தவர், ஐரோப்பியர்கள், ஆங்கிலோ - இந்தியர்களுக்கும் அளிக்க வேண்டும். ஒரு இடம் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவருக்குத் தரவேண்டும்.

சதவீதப்படி பார்த்தால், பிராமணர் அல்லாதவர்களுக்கு 44%, பிராமணர்களுக்கு 16%, முஸ்லிம்களுக்கு 16%, ஆங்கிலோ இந்தியர்கள் மற்றும் கிறிஸ்துவர்களுக்கு 16%, பட்டியல் இனத்தவர்களுக்கு 8% என இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த ஆணை ஒழுங்காக செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இதற்குப் பிறகு, 1922 ஆகஸ்ட் 15ஆம் தேதி கல்வி நிலையங்களிலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அளிக்கும் அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால், 1928 டிசம்பர் 15ஆம் தேதி வெளியிடப்பட்ட மூன்றாவது கம்யூனல் ஜி.ஓ. மூலம்தான், இந்த இட ஒதுக்கீடுகள் அமலுக்கு வந்தன.

முன்னாள் முதல்வர் அண்ணா, இந்த அரசாணை குறித்துக் குறிப்பிடும்போது, “தென்னாட்டைப் பொறுத்தவரை கம்யூனல் ஜி.ஓ. திராவிட சமுதாயத்தின், ஏன் - பார்ப்பனர் உள்பட மனித சமுதாயத்தின் சுதந்திர சாசனம் ஆகும். **கம்யூனல் ஜி.ஓ. ஒரு மானுட சுதந்திர சாசனம்**” என்று குறிப்பிட்டார்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் இது குறித்து வெளியிட்ட அறிக்கையில்:

“நூறு ஆண்டுகள் கழித்து செப்டம்பர் 16ஆம் நாளான இன்று வெள்ளுடை வேந்தர் தியாகராயர், சமுதாய சீர்திருத்த மருத்துவர்களான நடேசனார், டி.எம்.நாயர், கடலூர் ஏ.சுப்பராயலு, பனகல் அரசர், அமைச்சர் எஸ்.முத்தையா, பி.டி.இராஜன் ஆகியோரை நினைத்துப் பார்க்கிறேன். இவர்கள் உள்ளிட்ட பெருமக்கள் அன்று தொடங்கி வைத்த சமூக நீதிப் புரட்சிதான் தமிழ்ச் சமுதாயத்தின் இலட்சக்கணக்கானவர்கள் இல்லங்களில் விளக்கேற்றக் காரணமாக அமைந்தது. இந்த உத்தரவை எப்படிச் செயல்படுத்த வேண்டும் என்ற தரவரிசைப் பட்டியலைப் போட்டுக் கொடுத்தார் அன்றைய அமைச்சர் எஸ்.முத்தையா. அதனால் தான், ’இனிப் பிறக்கும் பிள்ளை களுக்கு முத்தையா என்று பெயர் சூட்டுங்கள்’ என்றார் தந்தை பெரியார் அவர்கள்.

இந்த சமூகநீதி அரசாணையானது தமிழ்நாடு எல்லையைக் கடந்து இந்தியா முழுவதும் இன்று வெற்றி நடைபோட்டு வருகிறது. இத்தகைய அகில இந்தியப்

(4ஆம் பக்கம்)

**அரசாங்க அகராதியில், தகுதி, திறமை, தரம் என்ற சொற்களை எடுத்துவிட வேண்டும்**



பரீட்சையில் பாஸ் செய்த பின்பு, தகுதி, திறமை, தரம் எதற்காகப் பார்க்கப்படுகிறது. அது எதற்காக வேண்டும்? அதன் அர்த்தம் என்ன? அதன் பலன் என்ன? மந்திரி சபையில் பெரிய பதவியில், அதிகாரத்தில் தரமுள்ளவர்களால், திறமையுள்ளவர்களால் ஏற்பட்ட நன்மை, பெருமை என்ன? தகுதி, திறமை, தரம்அற்றவர்களால் ஏற்பட்ட கெடுதி என்ன? அதிகாரம், உத்தியோகங்களிலும், வகுப்பு, உள் வகுப்பு, உட் பிரிவு, சாதி வகுப்புரிமை வேண்டும்.

கண்டிப்பாக அரசாங்க அகராதியில், தகுதி, திறமை, தரம் என்ற சொற்களை எடுத்துவிட வேண்டும்.

**விடுதலை – 18.07.1972**

### பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை (9)

# ஆர்.எஸ்.எஸ். தேசபக்தி இயக்கமா?

**விடுதலை இராசேந்திரன்**

***திராவிட இயக்கம் பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவானது என்றும், ஆர்.எஸ்.எஸ். தேச பக்தர்கள் இயக்கம் என்றும் சங்கிகள் பேசி வருவது வரலாற்றுப் புரட்டு.***

ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வினர், பெரியார் இயக்கத்தின் மீது தொடர்ந்து ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துவது வழக்கமாகிவிட்டது. திராவிட இயக்கம், பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரித்தது அவர்கள். தேச விரோத சக்திகள் பிரிட்டிஷ் விசுவாசி என்று பேசி வருகிறார்கள். இது குறித்து இளைய தலைமுறைக்கு தெளிவான புரிதலை உருவாக்க சில வரலாற்றுக் குறிப்புகளை சுருக்கமாகப் பதிவிடு கிறோம்.

- *பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நடந்த போராட்டமே சுதந்திரத்துக்கான போராட்டமல்ல; பார்ப்பனரல்லாதார் பார்ப்பனர் போராட்டம் என்பதே சரியான பார்வை.*

  *காங்கிரஸ் ஏன் துவக்கப்பட்டது? அதன் நோக்கம் என்ன? பார்ப்பபனரல்லாதார் இயக்கமான நீதிக் கட்சி என்று அழைக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைக் கழகம் ஏன் தோன்றியது? பெரியார் - அம்பேத்கர் அந்தச் சூழலில் சமூக விடுதலையை பேச வேண்டிய கட்டாயம் ஏன் வந்தது? இந்த சமூக வரலாற்றுச் சூழலின் பின்புலத்தைப் பற்றிய புரிதல் அவசியமாகிறது.*

  *1885இல் காங்கிரஸ் கட்சியைத் தொடங்கியதே ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்ற ஓய்வு பெற்ற பிரிட்டிஷ் அய்.சி.எஸ். அதிகாரி தான்.*

- *தொடங்கப்பட்டதன் நோக்கம் ஆங்காங்கே பிரிட்டிஷாருக்கு எதிரான எதிர்ப்புகளை எதிர் கொள்ள வேண்டும் என்பதே; பிரிட்டிஷாரை எதிர்த்தவர்களுடன் அப்போது 'உயர் கல்வி பயின்ற' படித்த கூட்டம் இணைந்து விடாமல் தடுப்பதற்காகவே காங்கிரஸ் உருவாக்கப்பட்டது என்று வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்திருக் கிறார்கள்.*

  *(ஆதாரம்: ஆய்வாளர் பெ.சு. மணி எழுதிய காங்கிரஸ் வினா-விடை)*

- *காங்கிரஸ் கட்சி மாநாடுகளிலே பிரிட்டிஷ் அரசுக்கும் பிரிட்டிஷ் ராணிக்கும் விசுவாசமாக இருப்போம் என்பதே எட்டு மாநாடுகளில் 1886 லிருந்து 1914 வரை முதல் தீர்மானங்களாக நிறை வேற்றப்பட்டன. பம்பாய் - கல்கத்தா - சென்னை காங்கிரஸ் மாநாடுகளின்போது பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் காங்கிரசாருக்கு விருந்து வைப்பது வழக்கம். காங்கிரஸ் கட்சியைத் தொடங்கிய ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவர் தான் - 20 ஆண்டுகள் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்.*

- *1885இல் காங்கிரசின் முதல் கூட்டத்தில் முதல் தீர்மானத்தை முன்மொழிந்தவர் தமிழ்நாட்டைச் சார்ந்த ஜி.சுப்ரமணிய அய்யர். இதை வரலாற்றுப் பெருமையாக தங்கள் 'இனத்துக்கு' பார்ப்பனர்கள் சொந்தம் கொண்டாடுகிறார்கள். இவர் 'சுதேசமித்திரன்', 'இந்து' பத்திரிகையில் ஆசிரியராக இருந்தவர். 'தேச பக்தராக'ப் போற்றப்படும் அவர் கொண்டு வந்த முதல் தீர்மானத்தின் வாசகம் என்ன?*

  *"பல நூற்றாண்டுகளாக இந்தியா கொலை, கொள்ளை, ஆக்கிரமிப்பு முதலான பயங்கர குழப்பங்களால் தாக்கப்பட்டு வந்தது.* **இறைவனின் கருணை மிக்க அருளாட்சி நோக்கால் ஆங்கிலப் பேரரசு இந்தியாவை ஆட் கொண்டது. பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவுக்கு அமைதியையும் பாதுகாப்பையும் அளித்தது"** *என்று கூறி இந்த ஆட்சியின் பயன்களைப் பட்டியல் போட்டுக் காட்டினார்.*

  *(ஆதாரம்: பெ.சு. மணி எழுதிய இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்)*

  *பிரிட்டிஷ் ஆட்சியை "கடவுள் அருளாட்சியின் விளைவு" என்பதே காங்கிரஸ் மனப்பான்மையாக இருந்தது.*

- *1929இல் நேரு தலைமையில் லாகூரில் கூடிய காங்கிரஸ் தான் முதன்முதலாக முழுமையான 'சுதந்திரப்' போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப் பட்டது. காங்கிரஸ் தொடங்கிய 33 வருடங் களுக்குப் பிறகு தான் முழு சுதந்திரம் என்ற கோரிக்கையே முன் வைக்கப்பட்டது.*

- *அப்போது எல்லாம் காங்கிரசில் இந்து மகாசபையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். காலையில் காங்கிரஸ் மாநாடு நடந்த அதே மேடையில் மாலையில் இந்து மகாசபை மாநாடு நடக்கும். 'சமூக சீர்திருத்தம்' பற்றி காங்கிரஸ் பேசவே கூடாது என்று காங்கிரஸ் கட்சிக்கு பார்ப் பனர்கள் கடிவாளம் போட்டு வைத்திருந்தனர்.*

- *காங்கிரசைத் தொடங்கிய ஹியூம் பார்ப்பனர் களுக்கு ஒரு வாக்குறுதியைத் தந்தார்.*

  *"நாம் அரசியல் ரீதியாகக் கூடுகின்றோமே தவிர, சமூக சீர்திருத்தம் பேசுவதற்கு காங்கிரஸ் இல்லை. ஜாதி ஒழிய வேண்டும் என்பது போன்ற பிரச்சினைகளை நாங்கள் பேச மாட்டோம். மதப் பிரச்சினைகளில் தலையிட மாட்டோம். ஆச்சாரம், வர்ணாஸ்ரம தர்மம், அனுஷ்டானம் இவை பற்றியெல்லாம் கண்டித்தோ, எதிர்த்தோ, மாற்றியோ நாம் பேச மாட்டோம்" என்று திட்டவட்டமாக அறிவித்தார்.*

  *(ஆதாரம்: அம்பேத்கரின் சாதியை ஒழிக்க வழி நூல்)*

- *1925இல் தொடங்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். என்ன செய்தது? 'தேசபக்தி' இயக்கமாகவா செயல் பட்டது?*

*1940 ஆம் ஆண்டு, கோல்வாக்கர் ஆர்.எஸ்.எஸ். தலைவராகிறார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பை கம்யூனிசத்துக்கும் சோஷலிசத்துக்கும் எதிர்ப்பு அணியாகப் பிரகடனப்படுத்துகிறார்; இந்து பிற்போக்காளர்களை சேர்த்துக்கொண்டு, முஸ்லீம்களின் மீது தாக்குதல் நடத்துவது என்பது இவர் போட்ட திட்டம்.*

*1942 ஆம் ஆண்டில் வெள்ளையேன வெளியேறு இயக்கத்தை காங்கிரஸ் கட்சி நடத்துகிறது. பல காங்கிரசார் கைது செய்யப்படுகின்றனர். அப்போது கோல்வாக்கர் பல பார்ப்பன இளைஞர்களையும், இந்து இளைஞர்களையும், ஆர்.எஸ்.எஸ்..க்கு இழுக்கும் முயற்சிகளில் மட்டுமே கவனம் செலுத்து கிறார். பல நடுத்தரக் குடும்பங்கள், குறிப்பாக பார்ப்பனர்கள் இந்த அமைப்பில் சேருகிறார்கள். பல பார்ப்பன பெற்றோர்களே, தங்கள் வீட்டுப் பிள்ளைகளை ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் சேர்த்தனர்; அதற்குக் காரணம், எங்கே காங்கிரஸ் கட்சிப் போராட்டத்திலே பங்கேற்று இந்த இளைஞர்கள் சிறைக்குப் போய்விடுவார்களோ என்று அஞ்சியது தான்.*

> - *வர்ணாஸ்ரம ஜாதிப் பிரச்சினைகளை எதிர்க்க மாட்டோம் என்று காங்கிரசைத் தொடங்கிய பிரிட்டிஷ் அதிகாரி பார்ப்பனர்களுக்கு வாக்குறுதி அளித்தார்.*
> - *காங்கிரஸ் கட்சி மாநாடும் இந்து மகாசபை மாநாடும் ஒரே மேடையிலேயே நடந்தன.*
> - *பிரிட்டிஷ் இராணுவத்துக்கு இராணுவக் கருவிகளை 'சப்ளை' செய்யும் ஒப்பந்தக்காரர் களாக ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் செயல்பட்டனர்.*
> - *வாஜ்பாய் சக போராளிகளை அரசுக்கு காட்டிக் கொடுத்தார்.*

*பிரிட்டிஷார் ராணுவத்துக்கு ஆள்கள் சேர்த்த போது, அதற்கு பேருதவி செய்தவர்கள் ஆர்.எஸ்.எஸ். காரர்கள். பல இந்து இளைஞர்களை பிரிட்டிஷார் ராணுவத்தில் இவர்கள் சேர்த்ததோடு ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் நேரடிப் பங்கு கொண்டிருந்தவர்கள் கூட, ராணுவத்தில் சேர்ந்தனர். "அரசியலை இந்து மயமாக்கு இந்துக்களை ராணுவ மயமாக்கு" என்பன அப்போது இவர்கள் போட்ட கோஷம்.*

*அது மட்டுமல்ல; அதைப் பயன்படுத்திக்கொண்டு சொந்த வியாபாரத்தையும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் ஆரம்பித்து விட்டார்கள்.*

*டிரேவர் டிரய்பர்க் என்ற பத்திரிகையாளர் அதுபற்றி கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்;*

*பல ஆர்.ஏஸ்.ஏஸ். தலைவர்கள் பிரிட்டிஷ் இராணுவத்துக்கு வேண்டிய இராணுவ எந்திரங்களை சப்ளை செய்யும் "காண்ட்ராக்ட்" டுகளை எடுத்தனர். 1943 ஆம் ஆண்டு கிழக்கு வங்கத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டபோது, இருந்த உணவுப் பொருள்களை எல்லாம் இந்த ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் வாரிக் கொண்டு போய் பிரிட்டிஷ் ராணுவத்தினருக்குக் கொடுத்தனர். பஞ்சத்தால் பரிதவித்த மக்கள் மேலும் கொடுமைக்குள்ளாயினர். இந்த காண்ட்ராக்ட்காரர் களிடம் பணம் ஏராளமாக வர ஆரம்பித்தது; பிரிட்டிஷ் ராணுவ நிதிக்குப் பணத்தை அள்ளி வீசினர். (அப்போதுதானே காண்ட்ராக்ட் கிடைக்கும்) ஆர்.எஸ்.எஸ். செய்தித்தாள்களுக்கும் பத்திரிகை களுக்கும், அரசாங்கம் பேருதவி செய்தது. ஏராளமான அரசு விளம்பரங்கள் தரப்பட்டன. இந்த நடவடிக்கைகள், ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் தேசியப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் என்ற மாயையை உடைத்துக் காட்டுகிறது" - என்று எழுதுகிறார், டிரேவர் டிரய்பர்க் (Drever Drieberg) தமது "Four Faces of subversion" என்ற நூலில் (பக்கம் 27)*

*பம்பாய் பிரிட்டிஷ் கவர்னரிடமிருந்து 1942 ஆம் ஆண்டில் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் நன்னடத்தை சர்டிபிகேட்டுகளை மகிழ்ச்சியோடு பெற்றுக் கொள் கின்றனர். புதுடில்லியில் உள்ள மத்திய அரசுக்கு பம்பாய் பிரிட்டிஷ் கவர்னர் கோல்வாக்கரைப் பற்றி ஒரு அறிக்கை கொடுத்தார். அதில் கோல்வாக்கர் எப்பொழுதும் முன்னெச்சரிக்கையாக இருக்கும் இயல்பு கொண்டவர் (Wary), தந்திர நுட்பமுடைய கூர்மதியாளர் (Astute). காங்கிரஸ் நடத்திய ஆகஸ்ட் போராட்டத்தில் ஜாக்கிரதையாக ஒதுங்கி இருந்தவர். (Scrupulously kept away)" என்று குறிப்பிட்டிருந்தார்*

*ஆதாரம்: மேற்குறிப்பிட்ட நூலில் பக். 27)*

*அப்போது பிரிட்டிஷ் அரசாங்கம் போட்ட உத்தரவுகளை எல்லாம், கோல்வாக்கர் கேள்வி கேட்காமல் கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்தார். அப்போது ஆர்.எஸ்.எஸ்.சில் இருந்த ராணுவப் பிரிவை (militarisation Department) ஒழித்துவிட வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசு உத்தரவிட்டவுடன், உடனே அந்த உத்தரவை ஏற்று அந்தப் பிரிவை ஒழிக்க முன்வந்தார். ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் ராணுவப் பயிற்சியையும் நிறுத்தியதோடு சீருடையையும் மாற்றிக் கொண்டனர்; காக்கி சட்டைக்குப் பதிலாக வெள்ளை சட்டையும், தோல் பூட்ஸ் களுக்குப் பதிலாக கேன்வாஸ் செருப்புகளும் அணிந்தனர்; பெரிய பெல்ட் போடுவதையும் எடுத்து விட்டனர்; இத்தனையும், பிரிட்டிஷார் உத்தரவை ஏற்று; செய்யப்பட்டதாகும்! ராணுவத்தினர் போலவே, உடையணிந்து, ராணுவப் பயிற்சியையே இவர்கள் - பிரிட்டிஷார் தடை உத்தரவு வரும்வரை 'இந்து ராஜ்யம்' நடத்தி வந்திருக்கிறார்கள்.*

*அந்த நேரத்தில், வாஜ்பாய் காட்டிக் கொடுக்கும் துரோக வேலையையும் செய்தார்.*

*1942 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தில் "தேசபக்த திலகம்" வாஜ்பாய் செய்த வேலை என்ன தெரியுமா?*

*காட்டிக் கொடுக்கும் வேலை. ஆம். அந்த வேலையைத்தான் வாஜ்பாய் செய்தார்!*

*1942 ஆம் ஆண்டு, வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் வாஜ்பாய் கலந்து கொண்டார். அவரோடு அவரது "புரட்சி" சகாக்களும் கலந்து கொண்டு சிறையேகினர். வெள்ளையனே வெளியேறு போராட்டம் தொடர்பாக நடந்த ஒரு வன்முறை சம்பவத்தைத் தொடர்ந்து இவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. சிறைக்குப் போன வாஜ்பாய் என்ன செய்தார் தெரியுமா? இந்த சம்பவத்தில் கலந்துகொண்டு சிறைப் பிடிக்கப்படாத தனது புரட்சி நண்பர்களின் பெயர்ப் பட்டியலை எல்லாம் போலீசாரிடம் கொடுத்து விட்டு தான் மன்னிப்புக் கேட்டுச் கொண்டு விடுதலை ஆகிவிட்டார்.*

*இந்த சம்பவம் பற்றி பம்பாயிலிருந்து வெளிவரும் "பிளிட்ஸ்" பத்திரிகை (ஜன. 26, 1974) ஒரு நீண்ட கட்டுரை வெளியிட்டது. அந்த வழக்கின் முழு விவரம், நீதிமன்ற நடவடிக்கைகள் எல்லாவற்றையும், அந்தக் கட்டுரை தெளிவாக விளக்குகிறது.*

*வாஜ்பாயின் சகோதரர் பிரேம் பிகார் லால் பாஜ்பாய், என்பவர் மத்திய பிரதேச அரசாங்கமே நடத்தும் சந்தேஷ்' (Sandesh) என்ற பத்திரிகையில் (12.5.1973 இதழில்) இதுபற்றி ஒரு கட்டுரை எழுதி இருக் கிறார். அந்தக் கட்டுரையில் தானும் தனது சகோதரர் வாஜ்பாயும் பட்டேஸ்வர் கலவரம் தொடர்பாக கைது செய்யப்பட்டோர் என்பதையும் வாஜ்பாய் இழைத்த துரோகத்தையும் ஒப்புக் கொண்டிருக்கிறார். அது மட்டுமா? கிரிஜாஷங்கர் பாஜ்பாய் என்ற பார்ப்பனர் அப்போது வைஸ்ராய் கவுன்சில் உறுப்பினர். அவரது தலையீட்டின் பேரில் தான் நாங்கள் இருவரும் சிறையிலிருந்து விடுதலை பெற்றோம் என்ற உண்மையை ஒப்புக் கொண்டிருக் கிறார்.*

*அதைத் தொடர்ந்து, முன்னாள் ஜனதா கட்சியின் பொதுச் செயலாளரும், தீவிர ஆர்.எஸ்.எஸ். காரருமான நானாஜி தேஷ்முக் என்பவரும், வேறு சில ஆர்.எஸ்.எஸ்.காரர்களும் 'பிளிட்ஸ்' ஏடு மீது வழக்கு தொடர்ந்தனர். ஆனால் இந்த வழக்கில் நேரடியாக சம்பந்தப்பட்ட வாஜ்பாய், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவோ, அல்லது 'பிளிட்ஸ்' ஏடு மீது மான நஷ்ட வழக்கு தொடரவோ முன்வரவில்லை.*

*வழக்கு விசாரித்த நீதிமன்றம், வழக்கையே தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துவிட்டது.*

*1942 ஆம் ஆண்டில் கோல்வாக்கரும், வாஜ்பாயும் தேசத்துக்கு செய்த 'தியாகங்கள் இப்படித்தான் இருந்தது.*

*(தொடரும்)*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY  TAMIL WEEKLY  REG.NO.TN/CC(S)DN/459/19-21  LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM  REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பாரதி – முற்போக்காளரா?

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டமன்றத்தில் 110ஆவது விதியின் கீழ் பல்வேறு சமூக மாற்றத்திற்கான முற்போக்கு அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார். ஆனால் ஒரே ஒரு அறிவிப்பு மட்டும் எதிர் தரப்பினரையும் பாராட்டுக்களை குவிக்கச் செய்யும் அறிவிப்பாக மாறி இருக்கிறது. அதுதான் செப்டம்பர் 16ஆம் தேதி மகாகவி நாள் என்று கொண்டாடப்படும் அறிவிப்பாகும்.

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் நினைவிடத்திற்குச் சென்று அங்கே மரியாதை செலுத்தி இந்த மண்ணில் நிற்கின்றபோது என் உளம் நடுங்குகிறது என்று உணர்ச்சிப் பூர்வமாக கூறியிருக்கிறார். பிரதமர் மோடி 'பனாரஸ்' பல்கலைக்கழகத்தில் பாரதியின் இருக்கை ஒன்று அமர்த்தப்படும் என்ற அறிவிப்பையும், எந்த கோரிக்கையும் வராத நிலையில் அவராகவே வெளியிட்டு இருக்கிறார். ஆக பொதுவுடமை கட்சிகளாக இருந்தாலும் சரி; ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி.காரர்களாக இருந்தாலும் சரி; பார்ப்பனராக இருந்தாலும் சரி; எல்லாரும் கொண்டாடுகின்ற ஒரு மனிதராக பாரதியார் மாறிப் போய் நிற்கிறார். இது எப்படி சாத்தியம்?

இந்த கேள்விக்கு பதில் அவருடைய கவிதைகளில் உரை நடைகளில் நிறைந்திருக்கிற குழப்பங்களும் முரண்பட்ட கருத்துக்களும்தான். பாரதியை ஆய்வு செய்தால் அவர், ஆர்.எஸ்.எஸ்.சின் அகன்ற பாரதம் என்ற கருத்தை ஏற்றிருக்கிறார். மதம் மாறுவது குற்றம் என்று கூறியிருக்கிறார். இந்தியாவிற்கு பாரதம் என்று பெயர் சூட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். முகமதிய, கிறிஸ்துவ மத எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். பசு மாட்டுக்கு புகழாரம் சூட்டியிருக்கிறார். சமஸ்கிருதத்தை ஆதரிக்கிறார். லெனின் நடத்திய போல்ஷ்விக் புரட்சி என்பது வன்முறையானது என்று சொல்லியிருக்கிறார். இப்படி ஏராளமான பிற்போக்குவாத சிந்தனைகள் அவரிடம் இருந்தாலும், ஆங்காங்கே ஒன்று இரண்டு கருத்துக்கள் முற்போக்காக இருப்பதை வைத்து ப. ஜீவானந்தம் போன்ற பொதுவுடமைக் கட்சியினர் பாரதியை கொண்டாடி அவரை தமிழ் நாட்டினுடைய ஒரு முற்போக்கு முகமாக மாற்றிவிட்டார்கள்.

இந்த நிலையில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளராக இருந்த குத்தூசி குருசாமி அவர்கள் 13.09.1947 ஆம் ஆண்டு 'குத்தூசி' என்ற பகுதியின் கீழ் 'விடுதலை'யில் கிண்டலாக எழுதிய ஒரு கருத்துதான் மிகச் சரியானதாக நாம் கருத வேண்டியிருக்கிறது. குத்தூசி குருசாமி எழுதிய அந்த "பலசரக்கு மூட்டை" என்ற கட்டுரையில் இப்படிக் கூறுகிறார், "விற்காத ஓமப்பொடி, சிக்கு நாற்றம் வீசும் காரா பூந்தி, பழைய பக்கோடா, அன்று வறுத்த அவல் இத்தனையும் கலந்து மிக்சர் கலப்பு என்ற பெயரால் விற்பார்கள் ஆரிய ஓட்டல்காரர்கள் அதுபோன்ற வேலை தான் பாரதியாருடையது. பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, சுதந்திர பள்ளு, கிருஷ்ணர் துதி, புதுமைப் பெண், புதிய ரஷ்யா, நவராத்திரி பாட்டு, தமிழ் மொழி வாழ்த்து, சக்தி பாட்டு இத்தனையும் கலந்த கதம்பம். யார் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். மூர் மார்க்கெட் பழஞ் சாமான் கடை மாதிரி. நான் இதை புராணக் கண் கொண்டு பார்க்கிறேன். அதை புரட்சிக் கண் கொண்டு பார்க்கிறேன். இதை கலைக் கண் கொண்டு பார்க்கிறேன். என்று சொல்வார்களே சில சந்தர்ப்பவாதிகள் அது போலத்தான் இதுவும் இருக்கிறது" என்று அவர் மிகச் சரியாக குறிப்பிட்டு இருக்கிறார்.

ஆனாலும் இன்றைக்கு பாரதியாருடைய அகண்ட பாரதத்தையும், சமஸ்கிருதத்தையும், மத மாற்றத் தடையையும், பசு மாட்டினுடைய புனிதத்தையும் தமிழ் நாட்டு மக்களிடம் அவரை ஆதரிக்கும் சங்கிகளால்கூட எடுத்துச் சொல்ல முடியாது. ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்ற சில பெண்ணுரிமைக் கருத்துக்களையும், பார்ப்பன எதிர்ப்பு வரிகளையும் எடுத்து வேண்டுமானால் பேச முடியும் என்ற நிலையை திராவிட இயக்கம் தமிழ் நாட்டில் உருவாக்கி வைத்திருக்கிறது என்பதை மட்டும் நம்மால் சுட்டிக்காட்ட முடியும். 1916இல் பார்ப்பனரல்லாதார் இயக்கம் துவங்குகிறபோது அதை கடுமையாக விமர்சித்து எழுதியவர் தான் பாரதி. இந்த இயக்கம் தோற்றுப் போகும் வெற்றி பெறப்போவது இல்லை என்று பாரதி எழுதினார். ஆனால் அந்த இயக்கம் வெற்றி பெற்று அதிகாரத்தைப் பிடித்து இன்று பாரதியினுடைய நாளையும் கொண்டாடுகின்ற நாளாக அறிவித்திருக்கிறது என்பது பாரதியாருக்கு கிடைத்திருக்கிற வெற்றியா? தோல்வியா? என்பதை வரலாறு தான் முடிவு செய்யும்.

## முதல்வர் மு.க. ஸ்டாலின்: உயர் கல்வி - சமூகப் புரட்சி

**7.5% இட ஒதுக்கீட்டின் கீழ் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களின் பொறியியல் கல்வி, விடுதி மற்றும் கலந்தாய்வுக் கட்டணத்தை அரசே ஏற்கும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**

"நீங்கள் இந்த இடத்துக்கு வந்திருக்கிறீர்கள் என்றால் அதற்காக உங்கள் வாழ்க்கையில் எவ்வளவு எல்லாம் சிரமப்பட்டு இருப்பீர்கள் என்பதை நான் அறிவேன். உங்களை இந்தப் பதினேழு வயது வரைக்கும் படிக்க வைக்க உங்கள் பெற்றோர் எவ்வளவு சிரமப்பட்டு இருப்பார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். அவர்களது நம்பிக்கையைக் காப்பவர்களாக நீங்கள் உங்களை இன்னும் சிறப்பாக உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று நாட்டின் முதல்வராக மட்டுமல்ல, அன்புச் சகோதரனாக நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிக் காலத்தில் இருந்து கல்லூரிக் காலத்துக்குள் நுழைகிறீர்கள். உங்கள் வாழ்க்கையின் அடுத்த கட்டத்துக்குச் செல்கிறீர்கள்.

திராவிட இயக்கத்தின் நோக்கமே அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் அவர் தகுதிக்கேற்ற வேலை தரப்பட வேண்டும் என்பதுதான். இந்த இயக்கமே அதற்காகத் தான் உருவாக்கப்பட்டது.

பொறியியல், வேளாண்மை, கால் நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் போன்ற தொழிற் கல்விப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில், 7.5சத இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய இந்த அரசால் கடந்த சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் சட்டம் இயற்றப்பட்டது.

நடப்புக் கல்வி ஆண்டில், இந்த சிறப்பு உள் ஒதுக்கீட்டு மூலம் பொறியியல் படிப்புகளில் சுமார் 10,000 அரசுப் பள்ளி மாணவர்கள் பயன் பெறுவர். அதேபோல, அரசுப் பள்ளிகளில் பயின்ற சுமார் 350 மாணவர்கள் வேளாண்மை, கால் நடை மருத்துவம், மீன்வளம் மற்றும் சட்டப் படிப்புகளிலும் பயன்பெறுவார்கள்.

அரசுப் பள்ளிகளில் படித்து 7.5 சதவீத இட ஒதுக்கீடு மூலம் தொழிற் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுடைய கல்விக்காக ஆகக்கூடிய செலவு கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், ஏன் கலந்தாய்வுக் கட்டணம் உள்ளிட்ட அனைத்தையும் இந்த அரசு ஏற்றுக் கொள்ளும்''.

இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பிரசாந்த் (எ) செட்டி, RS படிப்பகம் - தலைவர் முரளி, தங்கமாபுரிபட்டினம் - இராமச்சந்திரன் ஆகியோரும், சேலம் கேம்ப் - அருள், காவேரி கிராஸ் - சுந்தரம், நாட்டாமங்கலம் - காளியப்பன், மாதையன் குட்டை - வீரா, பெரியார் நகர் - பாசுக்கர், புதுக்காலனி - விஜய், தூக்கணாம்பட்டி - மு.திவாகர், காவேரி நகர்- ஆனந்த், பிட்டர்மேன் குடியிருப்பு - கிட்டு, நேரு நகர் - கதிரேசன், பாரதிநகர் - மாது, குமரன் நகர் - சீனிவாசன், ஒர்க்ஷாப் காலனி - அறிவுமதி, மணி மெடிக்கல் - திவாகர், மேட்டூர் பேருந்து நிலையம் - மார்ட்டின், பெரியார் படிப்பகம் - சி.கோவிந்தராஜ் ஆகியோரும் கழகக் கொடியினை ஏற்றி சிறப்பித்தனர்.

மதியம் 1.00 மணியளவில் தோழர்களுக்கு மேட்டூர் நகர படிப்பகத்தில் அசைவ உணவு வழங்கப்பட்டது.

**கொளத்தூர் :** மாவட்டத் தலைவர் சூரியக்குமார் தலைமையில் சோதனைச் சாவடி, பேருந்து நிலையம், காவல் நிலையம் அருகில், இரட்டை குளம், திருவள்ளுவர் நகர், அய்யம்புதூர், தார்காடு, பெரியார் நகர், இலக்கம்பட்டி, உக்கம்பருத்திக்காடு ஆகிய பகுதிகளில் உள்ள கழகக் கொடியினை தோழர்கள் ஏற்றி சிறப்பித்தனர்.

**காவலாண்டியூர் :** தலைமை செயற்குழு உறுப்பினர் ஈஸ்வரன் தலைமையில் குருவையில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து கண்ணாமூச்சி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி, கண்ணாமூச்சி பஞ்சாயத்து அலுவலகம், மூலக்கடை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றிற்கு பெரியார் படம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து செ.செ. காட்டுவளவு, செட்டியூர், காந்தி நகர், மூலக்கடை ஆகிய பகுதிகளில் உள்ள கழக கொடியினை தோழர்கள் ஏற்றி சிறப்பித்தனர். இரவு உணவு தோழர் சித்துசாமி அவர்கள் ஏற்பாடு செய்தார்.

**நங்கவள்ளி :** பெரியார் படம் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டது. நங்கவள்ளி பகுதிகளில் உள்ள கழக கொடியினை அமைப்பாளர் கிருஷ்ணன் மற்றும் நகர தலைவர் ராஜேந்திரன் தலைமையில் தோழர்களும் பொறுப்பாளர்களும் கழகக் கொடியினை ஏற்றி சிறப்பித்தனர்.

சேலம் மேற்கு மாவட்டத்தில் கொளத்தூர், மேட்டூர், மேட்டூர் RS பகுதிகளில் தோழர்கள் சிறப்பாக சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்திருந்தனர்.

மேட்டூர், மேட்டூர் RS பகுதியில் உள்ள சுவரெழுத்துப் பணியினை குமரப்பா, பாலா, முத்துராஜ் மற்றும் தோழர்கள் சிறப்பாக செய்தனர்.

சேலம் மாவட்டம் முழுவதும் 1000 சுவரொட்டிகள், 5000 துண்டறிக்கைகள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

**சங்கராபுரம் :** சங்கராபுரம் வட்டம் கடுவனூர் கிராமத்தில் பேருந்து நிலையம் அருகில் பெரியாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

செந்தமிழ் பட்டு கிராமத்தில் பெரியாரின் உருவப் படத்திற்கு, மாலையிட்டு மரியாதை செலுத்தப்பட்டது ஜாதி பெண்ணடிமைக்கெதிரான முழக்கங்கள் எழுப்பப்பட்டது.

மூரார்பாளையத்தின் பேருந்து நிலையத்தில் பெரியாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. நிகழ்வில் மூராார் பாளையம் மாணவர்கள் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். சங்கரா புரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு அப்பகுதியில் உள்ள இயக்கங்களான மக்கள் அதிகாரம் தமிழ் படைப்பாளர் சங்கம் தந்தை பெரியார் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம் இணைந்து பேரணியாக சென்று மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் ஏறத்தாழ 60 தோழர்கள் பங்கேற்றனர்.

பாக்கம் கிராமத்தில் பெரியார் முழக்கங்கள் வாசகங்கள் மற்றும் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து பேனர் அமைக்கப்பட்டது. பெரியாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. பெரியாரின் பிறந்த நாளையொட்டி தெருமுனை கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அதில் புதியதாக 10 தோழர்கள் கழகத்தில் இணைந்தனர் பின்பு கழக மாவட்டச் செயலாளர் க. ராமர் மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர் நா.அய்யனார் ஆகியோர் உரையாற்றினர்.

புதூர் கிராமத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது இறுதியாக கடுவனூர் கிராமத்தில் உள்ள நூலகத்தில் பெரியார் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

## தமிழ்த் தேசத்தின் எதிரி யார்? சென்னையில் நடந்த சிறப்பான கருத்தரங்கம்

'தமிழ்த் தேசியத்தின் எதிரி யார்?' எனும் தலைப்பில் தமிழ்த் தேச நடுவம் ஒருங்கிணைப்பில் செப்.19, 2021 மாலை 4 மணியளவில் சென்னை பத்திரிகையாளர் அரங்கில் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது. பொழிலன் தலைமையில் நடந்த கருத்தரங்கில் வாலாசா வல்லவன், பேரா. கருணானந்தம், பேரா. செயராமன், கி.வெ. பொன்னையன், ஆழி. செந்தில் நாதன் பங்கேற்ற ஆழமான கருத்துகளை வரலாற்று செய்திகளை முன் வைத்தனர்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார், மாவட்ட கழக செயலாளர் உமாபதி உள்ளிட்ட கழகத் தோழர்கள் பார்வையாளர்களாகப் பங்கேற்றனர்.

**அடுத்த இதழில்...**

**சென்னை கருத்தரங்கில் பேரா. ஜெயராமன் ஆற்றிய கருத்தாழமிக்க உரை.**

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரட்சிக்குக் காரணமான அனைவரையும் இந்த நேரத்தில் வணங்குகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசானது, இத்தகைய சமூகநீதிப் பயணத்தின் அடுத்தகட்டத்தை இன்று முதல் அறிமுகம் செய்ய இருக்கிறது.

சமூகநீதி அளவுகோலானது சட்டப்படி இருக்கிறது. ஆனால் முழுமையாக செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காக தமிழ்நாடு அரசால் ஒரு கண்காணிப்புக் குழுவை அமைக்க முடிவெடுத்துள்ளோம்.

கல்வி, வேலை வாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல் முறையாக, முழுமையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதை இக்குழு கண்காணிக்கும்; வழி காட்டும்; செயல்படுத்தும். சரியாக நடைமுறைப்படுத்த படாவிட்டால் உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்கு இக்குழு பரிந்துரை செய்யும். இதற்கான விதி முறைகள் விரைவில் வெளியிடப்படும். இதில் அரசு அதிகாரிகள், கல்வியாளர்கள், சட்ட வல்லுநர்கள் இடம் பெறுவார்கள்.

சமூகநீதி அரசாணையின் நூற்றாண்டு நாளில் சமூகநீதிக் கண்காணிப்புக்குழுவை அமைப்பதில் பெருமை அடைகிறேன்.

எல்லோர்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கி நடக்கட்டும் இந்த வையம்!" - என்று குறிப்பிட்டார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP  Posted: 23rd September 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN